இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிதம்பரம்.

O.S.No. 52/2013

பி.சா.4

**2026**–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **13**–ஆம் நாள் வியாழக்கிழமை பி.சா.**4** ராஜராமலிங்கம், த/பெ. ராஜரத்தினம் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**3ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை(தொடர்ச்சி):–**

எனக்கு **2** முறை விபத்து ஏற்பட்டு படுத்த படுக்கையாக இருந்தேன் என்று என்னுடைய முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த விபத்து என்ன விபத்து என்று கேட்டால் மாந்த்ரீகத்தால் ஏற்பட்ட விபத்து. கையில் கத்தி வைத்துக்கொண்டு குதிரைமீது நேரில் வந்து நிலத்தை எனக்கு கொடு என்று மிரட்டினார். அது மாதிரி **2** முறை மிரட்டினார். ஆறுமுகம்தான் அதுமாதிரி மிரட்டினார். வழக்குச்சொத்து உள்ள இடத்தில் அது மாதிரி மிரட்டினார். இது சம்பந்தமாக போலீசில் புகார் கொடுத்தேன். **2005**க்கு பிறகும், **2009**க்கு முன்பும் அதுமாதிரி மிரட்டினார். **31.5.2005**ல் இருந்தும் **2009**க்கு முன்பும் அதுமாதிரி மிரட்டினார். **2005**க்கு முன்பாக இதுமாதிரி என்னை மிரட்டவில்லை. **2009**க்கு பிறகு அது மாதிரி மிரட்டவில்லை. வழக்குச்சொத்து சேத்தியாதோப்பின் எல்லையில் கூட்டுரோடுக்கு பக்கத்தில் உள்ளது. **3**ஆம் பிரதிவாதி ஆறுமுகம் கருப்பசாமி கோயில் அமைத்த பிறகு அந்த இடத்தில் நிலத்தின் விலை ஏறியதா என்று கேட்டால் ஏறவில்லை. **2005**ல் இருந்து விலை படிப்படியாக ஏற ஆரம்பித்தது என்று சொன்னால் சரிதான். **2009**ல் இருந்து என் மனைவி உடல்நலம் சரியில்லாமல் இருக்கிறார். என்ன உடம்புக்கு என்று கேட்டால் சுகர் இருக்கிறது, கர்ப்பபை ஆபரேஷன் மற்றும் இதய அறுவை சிகிச்சை நடந்தது. எனக்கு

அந்த இடத்தில் சர்வே நம்பர் 96/6ஏ–யில் 12 சென்ட்டும், 6பி–யில் 58 சென்ட்டும், 96/7ஏ–யில் 39 சென்ட்டும் எனக்கு மூதாதையர்வழி பாத்திய சொத்து இருந்தது. இந்த சொத்துக்கள் எல்லாம் புஞ்சை நிலங்கள். இந்த சொத்துக்களில் கம்பு, கேழ்வரகு, எள் பயிர் செய்துவந்தேன். 2000 ஆண்டுக்கு முன்பு சுமார் 20 வருடம் அந்த நிலங்களில் பயிர் செய்தேன், அதன்பிறகு சுமார் 5 வருடம் கறம்பாக இருந்தது. அதன்பிறகு மீண்டும் பயிர்செய்தேன். 2000 ஆண்டுக்கு முன்பு அந்த நிலங்களில் பயிர் செய்ததற்கு ஆதாரங்கள் வைத்திருக்கிறேனா என்று கேட்டால் அடங்கல் வைத்திருக்கிறேன். இந்த சொத்துக்களுக்கு என் அப்பா பெயரில் பட்டா இருந்தது, பிறகு என் பெயரில் மாற்றிக்கொண்டேன். 2003 அல்லது 2004ல் என் பெயருக்கு பட்டா மாற்றிக்கொண்டேன். தற்பொழுது அந்த நிலங்களுக்கு ஆறுமுகம் பெயரில் பட்டா இருக்கிறது. இந்த சொத்துக்களில் ஒரு பகுதி சொத்தை மகேஸ்வரிக்கு கிரயம் கொடுத்தேனா என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை, என்ன நடந்தது என்றே எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 கிரயப்பத்திரத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து கிடையாது. (வா.சா.ஆ.4ல் உள்ள கையொப்பங்களை காட்டி கேள்வி கேட்கப்பட்டது). நான் கையெழுத்து போட்டேனா என்று ஞாபகம் இல்லை. என்ன நடந்தது என்றே எனக்கு தெரியவில்லை. உடல்நிலை சரியான பிறகு நான் பத்திரங்களை வாங்கி பார்த்தேன். நான் குடும்ப செலவுக்காக ரூ.32,700ஐ மகேஸ்வரியிடம் வாங்கியதாக இந்த கிரயப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் நான் அவரிடமிருந்து பணம் வாங்கவில்லை. பத்திரத்தை வாங்கி படித்த பார்த்த பிறகுதான் அந்த விவரம் எனக்கு தெரியவந்தது. கிளாங்காட்டு கிராமத்தை சேர்ந்த வைத்தியநாதசாமி என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. சேத்தியாதோப்பில் ஆர்.கிருஷ்ணசாமி என்பவர் இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. மகேஸ்வரியை எனக்கு தெரியாது. சுப்ரமணியன் மகன் ராஜன்

என்பவரை எனக்கு தெரியாது. ராஜனிடம் நான் ரூ.32,700 வா.சா.ஆ.5 கிரயத்துக்காக வாங்கினேனா என்று கேட்டால் நான் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 கிரயபத்திரத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துக்கள் கிடையாது. பழனி மனைவி அஞ்சம்மாள் என்பவரை எனக்கு தெரியாது. அவரிடமிருந்து நான் கிரயத்துக்காக ரூ.32,700ஐ வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 கிரயப்பத்திரத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது கிடையாது. எங்கள் ஊரில் உள்ள வழக்கறிஞர் மனோகரனுக்கும் எனக்கும் விரோதம் எதுவும் இல்லை. கோவிந்தசாமி என்பவருக்கு நான் கிரயம் கொடுத்திருக்கிறேனா என்று கேட்டால் எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை. கோவிந்தசாமியை தெரியுமா என்று கேட்டால் எனக்கு தெரியாது. கோவிந்தசாமி வடலூரில் நெய்வேலி ரோட்டில் குடியிருக்கிறார் என்றும், அவரை எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. கோவிந்தசாமியிடமிருந்து கிரயத்திற்காக ரூ.42,000ஐ நான் வாங்கவில்லை. எங்கள் ஊரில் தெய்வநாயகம் என்று எழுத்துக்காரர் இருந்தாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. சேத்தியாதோப்பில் சந்திரகாசன், அவருடைய மகன் சண்முகசுந்தரம் ஆகியோரை தெரியுமா என்று கேட்டால் தெரியாது. இளஞ்சியம் என்பவரிடமிருந்து ரூ.32,700ஐ இடத்தை கிரயம் கொடுத்ததற்கு நான் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது கிடையாது. சேத்தியாதோப்பில் ரத்தினசாமி என்பவர் இருக்கிறரா என்று எனக்கு தெரியாது. அய்யாக்கண்ணு என்பவரிடமிருந்து கிரயத்துக்காக ரூ.38,150ஐ நான் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது கிடையாது. வாண்டியாங்குப்பம் கிராமம் புவனகிரிக்கு பக்கத்தில் இருக்கிறது. வாண்டியாங்குப்பம் தயாளசாமி குமாரர் கிருஷ்ணமூர்த்தி எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியாது. பிரதிபா

என்பவரிடமிருந்து என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 கிரயத்துக்காக ரூ.70,850ஐ நான் வாங்கவில்லை. சேத்தியாதோப்பில் வெங்கடாசலம் குமாரர் கண்ணுசாமி என்பவரை தெரியுமா என்று கேட்டால் தெரியாது. சேத்தியாதோப்பில் கிருஷ்ணசாமி குமாரர் ஜெயராமன் என்பவரை தெரியுமா என்று கேட்டால் தெரியாது. கலியபெருமாளிடமிருந்து கிரயத்துக்காக ரூ.54,500ஐ நான் வாங்கவில்லை. கிளாங்காடு கிராமத்தை சேர்ந்த வைத்தியநாதசாமி மகன் கலியபெருமாள் என்பவரை தெரியுமா என்று கேட்டால் தெரியாது. கிருஷ்ணசாமி மகன் ஜெயராமன் என்பவரை எனக்கு தெரியாது. ஜோதி என்பவரிடமிருந்து கிரயத்துக்காக ரூ.49,050ஐ நான் வாங்கவில்லை. சாந்தி என்பவரிடமிருந்து கிரயத்துக்காக ரூ.1,15,000ஐ நான் வாங்கவில்லை. கிளாங்காட்டை சேர்ந்த நடேச காளிங்கராயர் மகன் கோபாலகிருஷ்ணன் என்பவர் தற்போது உயிருடன் இல்லை, அவர் இறந்துவிட்டார். அவர் என்னுடைய மாமா. சேத்தியாதோப்பில் கூட்டுரோட்டில் ராஜாங்க சமுட்டியார் குமாரர் கண்ணுசாமி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. கோபாலகிருஷ்ணன் இறந்து 10 வருடத்துக்குள்தான் இருக்கும். எனக்கு உடல்நலம் சரியான பிறகு வா.சா.ஆ.13 கிரயப்பத்திரம் பற்றி அவரிடம் நான் எதுவும் கேட்கவில்லை. சேத்தியாதோப்பில் நாராயணன் குமாரர் ராஜேந்திரன் என்பவர் இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. நான் அவரிடமிருந்து கிரயத்துக்காக ரூ.10,000 வாங்கினேனா என்று கேட்டால் நான் வாங்கவில்லை. சேத்தியாதோப்பில் கோவிந்தசாமி குமாரர் சாரங்கபாணி என்பவர் இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. சேத்தியாதோப்பில் ராமலிங்கம் மகன் தேவேந்திரன் என்பவர் இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. சேத்தியாதோப்பில் எழுத்தர் முத்தையன் என்பவர் இருந்தார், அவர் இறந்துவிட்டார். அவருக்கும் எனக்கும் விரோதம் எதுவும் கிடையாது. அசோகன் மனைவி சாந்தி என்பவரை எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியாது. அவரிடமிருந்து கிரயத்தொகையாக

ரூ.49,050ஐ நான் வாங்கவில்லை. சேத்தியாதோப்பு கிருஷ்ணசாமி மகன் ஜெயராமன் என்பவரை தெரியுமா என்று கேட்டால் தெரியாது. இந்த கிரயப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை எனக்கு தெரியாது என்றும், அவர்களிடமிருந்து நான் கிரயத்தொகை வாங்கவில்லை என்றும் சொல்கிறேனே அவர்கள்மீது காவல்நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்று கேட்டால் அவர்கள்மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். 2009க்கு பிறகு அவர்கள்மீது புகார் கொடுத்தேன். 2009 அல்லது 2010ல் அவர்கள்மீது புகார் கொடுத்தேன். சேத்தியாதோப்பில் நானோ என்னுடைய சகோதரரோ சேர்மேனாக இருந்ததில்லை. கிரயத்தொகைகளை பெற்றுக்கொண்டு கிரயம் செய்து கொடுத்துவிட்டு தற்போது கிரயப்பத்திரங்களில் உள்ள கையொப்பங்களை என்னுடையது கிடையாது என்றும், 3ஆம் பிரதிவாதி ஆறுமுகம் எனக்கு சூன்யம் வைத்திருப்பதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகளுக்கும், மனைவிக்கும் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தபோது நான் சுயநினைவுடன் இருந்தேனா என்று கேட்டால் அப்போது என் மாமா கோபாலகிருஷ்ணன்தான் ஏற்பாடு செய்தார், அப்போதும் எனக்கு சுயநினைவு இல்லை. கிராமத்தில் பொது சேவைக்காக நான் சொத்து கொடுத்தேன். பாகம் பிரிந்தபிறகு எங்கள் குடும்பத்திற்கு நான்தான் தலைவர் என்ற முறையில் அந்த சொத்தை கொடுத்தேன். ஓ.எஸ். 1/2009 வழக்கில் ஸ்டேட்மெண்ட்டுகளில் நான்தான் கையெழுத்து போட்டேன். அந்த வழக்கின் தீர்ப்பை எதிர்த்து ஏ.எஸ். 26/2012 என்ற மேல்முறையீட்டை நான்தான் தாக்கல் செய்தேன். அதில் எனக்கு சாதகமாக தீர்ப்பானது. எதிர் பார்ட்டி அதை எதிர்த்து ஐகோர்ட்டில் வழக்கு போட்டார். அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் குருராஜ் அவர்களை நியமித்து நடத்தினேன். கிரயம் பெற்றவர்கள்மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததற்கு சிஎஸ்ஆர் ரசீது ஏதும்

வாங்கினீர்களா என்று கேட்டால் அவர்கள் கொடுக்கவில்லை. ஓ.எஸ்.1/2009 வழக்கு 31.5.2005 தேதியிட்ட அக்ரிமெண்ட்டின் அடிப்படையில் போடப்பட்ட வழக்கு. அந்த அக்ரிமெண்ட்டில் நான் கையெழுத்து போட்டு இருக்கிறேனா என்று கேட்டால் என்ன நடந்தது என்றே எனக்கு ஞாபகம் இல்லை. ஆறுமுகம்தான் வழக்குச்சொத்தில் நான் வைத்திருந்த மதில் சுவரை இடித்துவிட்டார். அதற்கு போலீசில் புகார் கொடுத்தேன். அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. சிஎஸ்ஆர் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. என்னை கேட்டுக்கொண்டுதான் அவர் ஷெட் போட்டார். வாடகை தருகிறேன் என்று சொல்லி வழக்குச்சொத்தில் அவர் ஷெட் போட்டார். அவர் வாடகை கொடுக்கவில்லை. அவர்தான் அந்த கொட்டகையையும் வைத்திருக்கிறார். என் மனைவிக்கும் ஆறுமுகம் மாந்த்ரீகம் வைத்திருக்கிறார், அதனால்தான் அவருக்கு உடல் சுகமில்லாமல் போனது. எனக்கும், என் மகளுக்கும் சுமூகமான உறவுமுறைதான் இருந்துவந்தது. நானும், என் மகளும் கூட்டு சேர்ந்துகொண்டு ஏற்கனவே கொடுக்கப்பட்ட கிரய சொத்துக்களை அபகரிக்கவேண்டி பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்காக எல்லாவற்றையும் நான் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:—**

இல்லை.